


புதுகை
# வரலாறு நாளிதழ்

www.varalaruu.com varalaruu 1 pudugaivaralaru varalaruu 7502051351




செவ்வாய் ❖ ஏப்ரல். 11, 2023 | புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 186 ❖ ரூ.10

சிங்கப்பூரில் சித்திரைத் திருவிழா, புதுகையில் கல்வித் திருவிழா - அடித்தள தலைவர் பெ.மூர்த்தி

# அடையாளம்

## வரலாற்று வாசற்படியை மிதிக்காத பெற்றோர்கள் மீது எனக்கு ஒரு தனிப்பட்ட கோபம் உண்டு ; கவிஞர் தங்கம் மூர்த்தி

## நான் படித்த பள்ளியை பராமரிக்குது புதுகை வரலாறு ; எம்.எல்.ஏ முத்துராஜா

## எந்த டிகிரி படிக்கிறோம் என்பது முக்கியமல்ல ஆர்வத்துடன் படித்தால், வெற்றி பெறலாம் ; முன்னாள் துணை வேந்தர் சோ.சுப்பையா

## தாம் படித்த காலங்களில் கண்காட்சிகளை தேடி அலைந்ததும் உண்டு முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர்





**புதுக்கோட்டை, ஏப்.11–**

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள விஜய் பேலஸில் புதுகை வரலாறு நாளிதழ் சார்பில் ஏப்ரல் 8,9 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற கல்வி கண்காட்சி நிறைவு பெற்றது. இவ்விழாவிற்கு இலுப்பூர் மதர்தெரசா கல்வி நிறுவனங்களின் தாளாளர் சி.உதயகுமார் தலைமை தாங்கினார். விஜய் நிறுவனங்களின் தொழிலதிபர் வி.முருகானந்தம், முத்து மீனாட்சி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜி.பெரியசாமி, பேக்கரி மஹாராஜ் நிர்வாக இயக்குநர் அருண் சின்னப்பா, புவனேஸ்வரி நகைகடை உரிமையாளர் எஸ்.வெங்கடேஷ், கே.எம்.எஸ்.ஹக்கீம் பிரியானி கடையின் நிர்வாக இயக்குநர் எம்.சையது இப்ராஹீம் ஆகியோர்கள் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர்.

முதன்மை விருந்தினராக சிங்கப்பூர் அடித்தள தலைவர் பெ.மூர்த்தி கலந்து கொண்டு விழாவினை தொடங்கி வைத்து பேசியதாவது, சிங்கப்பூரில் இருந்து ஒரு வார விடுமுறையில் வந்தாலும். இந்த கல்வி கண்காட்சியில் பங்கேற்க வேண்டும் என்ற குறிக்கோளில் இருந்தேன். அந்நாட்டைப் பொறுத்தவரைக்கும் தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் நல்ல மரியாதையும், முன்னுரிமையும் கொடுக்கின்றனர். அங்கே இப்போது சித்திரைத் திருவிழா, இங்கே கல்வித் திருவிழா இரண்டும் நமக்கான தனிப்பட்ட அடையாளம் என்றார்.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா பேசியதாவது, கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து இந்த கல்வி கண்காட்சிக்கு வந்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு முக்கிய காரணம் நான் படித்த அரசுமுன்மாதிரி மேல்நிலைப்பள்ளிக்கு சில அடிப்படையான தேவைகளை இந்த நாளிதழ் செய்து கொண்டிருக்கிறது. புதுகை வரலாறு ஆசிரியரும் அப்பள்ளியில் தான் படித்தார் என்பதும் கூடுதல் மகிழ்ச்சி. நம்முடைய அரசு எப்போதும் கல்விக்கு முன்னுரிமை கொடுக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. குறிப்பாக பள்ளி மாணவர்களின் முன்னேற்றத்திற்காக நான் முதல்வன் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

தேசிய நல்லாசிரியர்- தங்கம் மூர்த்தி பேசியதாவது, உயர் கல்விக்கான வாசல் இங்கே திறக்கப்பட்டது. மாணவர்கள் அதில் தன்னுடைய பாதங்களை பதிய வைத்து, படிப்புகளை தேர்ந்தெடுத்து தனக்கான ஒரு வரலாற்றை பதிவு செய்தனர். ஆனால் இந்த வரலாற்று வாசற்படியை மிதிக்காத பெற்றோர்கள் மீது எனக்கு ஒரு தனிப்பட்ட கோபம் உண்டு. ஏனென்றால் விடுமுறை நாளில் கூட நம் குழந்தைக்கு நேரம் ஒதுக்கவில்லை என்றால், நமக்கு எப்போது தான் நேரம் கிடைக்கும். கண்டிப்பாக தேர்வு முடிவுகள் வெளியானவுடன் வாடகைக் காரோ, அல்லது பேருந்து மூலமாகவோ கிட்டத்தட்ட நான்கு நாட்களுக்கு இந்த கண்காட்சியில் இடம்பெற்ற 38கல்லூரிகளையும் சுற்றி, சுற்றி பெற்றோர்கள் வருவார்கள் என்பதை இப்போதே பதிவு செய்கிறேன் என்றார்.

சிறப்பு விருந்தினராக காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் சொ.சுப்பையா பேசியதாவது, கல்வி கண்காட்சி என்று தான் தலைப்பு கொடுத்து இருக்கிறார்கள். வழிகாட்டி நிகழ்ச்சியாக கொடுக்கவில்லை. அந்த தலைப்பில் பேசுவதில் சில சங்கடங்கள் இருக்கிறது. இருந்தாலும் நான் ஒரு பல்கலைக்கழத்தில் இருந்து வந்திருப்பதால், மாணவர்களுக்கு எது மாதிரியான பாடப்பிரிவை எடுத்துப் படித்தால் உதவியாக இருக்கும் என்பதைப்பற்றி சில வாரத்தைகள் கூற வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. இந்த மேடையைப் பார்த்தால் மருத்துவர், பொறியாளர், பத்திரிகை ஆசிரியர், தொழிலதிபர், கலை சாந்தவர்கள் இப்படி பல துறைகளில் சாதித்தவர்கள் உங்கள் எதிரே இருக்கின்றனர். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் ஒரு தனிப்பட்ட முறையில் படித்தால் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்றால் இல்லை. எந்த டிகிரி படிக்கிறோம் என்பது முக்கியமல்ல. அந்த படிக்கிற துறையை ஒரு ஆர்வத்துடன் படித்தால், நிச்சயமாக வெற்றி பெறலாம்.

நீங்கள் பி.காம் படித்து விட்டு வங்கிக்கு வேலைக்கு போகலாம் என்று நினைப்பீர்கள். ஆனால் வங்கியில் நேரடியாக சென்று பார்த்தால் வங்கியின் பணியாளர் பொறியியல் படித்துவிட்டு தான் இருப்பார். நாம் எது மாதிரியான ஒரு முத்திரை கொடுக்கிறோம் என்றால், இந்த படிப்புக்கு இந்த வேலை தான் கிடைக்கும் என்ற தவறான புரிதலை நமக்குள் ஏற்படுத்தி விட்டோம். குளவாய்ப்பட்டி பகுதியைச் சேர்ந்த ஒருவர். புதுக்கோட்டை மற்றும் அழகப்பாவில் தமிழத்துறையை தேர்தெடுத்துப் படித்தார். இப்போது வெளிநாட்டில் ஒரு பல்கலைக்கழகத்தில் பணிசெய்கிறார். அவருக்கு உறுதுணையாக இருந்தது தமிழோடு, சேர்ந்த கணினி சார்ந்த தொழில்நுட்பமும் தான். நம்மைச் சுற்றி நிறைய மாற்றங்கள் ஒவ்வொரு துறைகளிலும் நடந்து கொண்டே இருக்கிறது. அப்படி மாற்றங்களையும் எதிர் கொள்கிற தகுதியான கல்வி நம்மிடம் இருக்க வேண்டும். பல்வேறு நாளிதழ்கள் நடத்துகிற கல்வி கண்காட்சியில் கூட எந்த பல்கலைக்கழகமும் வருவதில்லை. ஆனால் இங்கே இரண்டு பல்கலைக்கழகம் வந்திருக்கிறது என்றால் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு வரலாற்று நிகழ்வு தான் என்றார்.

முன்னதாக நடைபெற்ற மாணவர்களை ஊக்கப்படுத்தும் நிகழ்வில் விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் சி.விஜயபாஸ்கர் கலந்து கொண்டு பேசியது- என்னைப் பொறுத்தவரைக்கும் கல்வி சார்ந்த விஷயங்களில் நான் எப்போதும், பின் வாங்கியது இல்லை. நான் படித்த காலங்களில் இதுபோன்ற கண்காட்சிகளை தேடி அலைந்ததும் உண்டு. ஆனால் இப்போது நம் மாவட்டத்திலேயே இது நடப்பது சிறப்பான ஒரு விஷயம். படிக்கும் மாணவர்கள் மருத்துவம் மட்டும் தான் வேண்டும் என்று நினைக்காமல், எந்த படிப்பு என்றாலும் இடை நிறுத்தாமல் உயர்கல்வியையும், அதற்கு மேலாகவும் கண்டிப்பாக தொடர்ந்து படித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றார்.

குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் மாணவர் ராமகிருஷ்ணன், வெள்ளாகுளம் செயின்ட் இக்னேஷியஸ் பள்ளியின் மாணவர் யுகன், புதுக்கோட்டை வைரம்ஸ் மேல்நிலைப்பள்ளியின் மாணவி நாகுபிரியா ஆகியோர்களுக்கு மதர்தெரசா கல்வி நிறுவனங்களின் சார்பில் லேப்டாப் வழங்கப்பட்டது. விழாவில் புதுக்கோட்டையின் பிரபல இளம்பாடகர்; மனோ ஈஸ்வரனுக்கு "குரலிசை மன்னர்" சுமார் 50-ஆண்டுகளாக நாளிதழ்களை மக்களிடம் உரிய நேரத்தில் கொண்டு செல்லும் எஸ்.பி.முத்துமணிக்கு "வாசகர் நேசர்" இதை பணியை அறந்தாங்கி பகுதியில் செய்து வரும் டி.கோபால் என்பவருக்கு "பத்திரிகை பாதுகாவலர்" அடைமொழியில் வரலாற்று நாயகர் விருது வழங்கப்பட்டது. மேலும் கடந்த ஒரு வருட காலமாக ரோட்டரி, கட்டிட பொறியாளர்கள் சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றும் தலைவர், துணை ஆளுநர், மண்டல தலைவர், மாவட்ட பிரதிநிதி போன்றவர்களுக்கு சிறந்த சமூக சேவைக்கான விருதுகள் வழங்கப்பட்டது.

பங்கேற்ற கல்வி நிறுவனங்கள், கான மழையின் இசைக்குழுவின் நிறுவனர் சௌமியா, ஆசிரியர் மற்றும் சமூக ஆர்வலர் முத்துராமலிங்கம், கலை நிகழ்வுகள் மூலமாக மக்களை அசர வைத்த பள்ளி மாணவர்கள் ஆகியோர்களுக்கு நினைவுப் பரிசுகளும் கொடுக்கப்பட்டது.

செய்தியாளர்களுக்கு இவ்வாண்டிற்கான அடையாள அட்டையும், வெள்ளிக் காப்பும், பதக்கமும் அணிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் முன்னதாக புதுகை வரலாறு நிறுவனர்&ஆசிரியர் எஸ்.சிவசக்திவேல் வரவேற்றார், முடிவில் சென்னை பதிப்பின் தலைமை செய்தியாளர் எஸ்.காதர் உசேன் நன்றி கூறினார்.

## தமிழகத்தை பசுமையாக்க 50 ஆயிரம் விதைப்பந்துகளுடன் வேலூர் பிரசிடென்சி ரோட்டரி சங்கம் புதுக்கோட்டைக்கு வந்தடைந்தது

**புதுக்கோட்டை, ஏப்.11–**

தமிழகத்தை பசுமையாக்கும் நோக்கில் வேலூரில் புறப்பட்ட வேலூர் பிரசிடென்சி ரோட்டரி சங்கம் புதுக்கோட்டையில் ரோட்டரி சங்கத்திடம் பத்தாயிரம் விதைபந்துகளை வழங்கியது.

வேலூர் பிரசிடென்சி ரோட்டரி கிளப் சார்பில் பசுமை தமிழகம் எனும் தலைப்பில், நீர்நிலைகள், நீர்வரத்துக் கால்வாய்கள், மலைப்பகுதிகள் ஆகியவற்றை ஒட்டிய பகுதிகளில் விதைப்பந்துகளை விதைப்பதன் மூலமாக பசுமையை மேம்படுத்த திட்டமிடப்பட்டது. இதற்காக ஒரு ரோட்டரி மாவட்டத்திற்கு 10 ஆயிரம் விதை பந்துகள் வீதம் ஐந்து மாவட்டங்களுக்கு 50 ஆயிரம் விதை பந்துகள் வழங்கும் நிகழ்வின் தொடக்க விழா ஏப்ரல் 6ஆம் தேதி வியாழக்கிழமை சங்கத்தின் தலைவர் தினகரன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக ரோட்டரி மாவட்ட 3231 ஆளுநர் பழனி மற்றும் பாபு கலந்து கொண்டு விதைப்பந்து வழங்கும் நிகழ்வை துவக்கி வைத்தனர். தலைவர் தினகரன் தலைமையில் முன்னாள் தலைவர் எஸ்வி சண்முகம், இணைச் செயலாளர் கார்த்தி, மற்றும் உறுப்பினர்கள்





மோகனி சண்முகம், நித்தியா தினகரன், ஆகியோர் புதுக்கோட்டை வந்தடைந்தனர் அவர்களுக்கு ரோட்டரி மாவட்டம் 3000 சார்பாக மண்டல செயலாளர் வி. ஆர். வெங்கடாஜலம், திட்டம் பீர் சேக், ஜி.எஸ்.எம். சிவாஜி, துணை ஆளுநர்கள் சுரேஷ்குமார், டாக்டர் கருப்பையா ஆகியோர் வரவேற்றனர். புதுக்கோட்டை விஜய் பேலஸில் நடைபெற்ற புதுகை வரலாறு கல்வி கண்காட்சியில் விதைப்பந்துகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அவர்களிடம் பத்தாயிரம் விதை பந்துகளை வேலூர் பிரசிடெட்டின்சி பசுமை குழுவினர் வழங்கினர்.

இவ்விழாவில் மண்டல செயலாளர் வெங்கடாஜலம், கவிஞர் தங்கம்மூர்த்தி, புதுகை வரலாறு நிறுவனர் சு.சிவசக்திவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நோட்டரி சங்கங்களின் அனைத்து தலைவர்களும் பங்கேற்றனர். இறுதியாக சிவாஜி நன்றி கூறினார்.

## ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல்

**சென்னை, ஏப்.11–**

தமிழக சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.



தமிழகத்தில் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டில் பணத்தை இழந்து பலர் தற்கொலை செய்து கொண்டதைத் தடுக்க கடந்தாண்டு அக்டோபர் மாதம், அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்த சட்டத்துக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார். அதைத்தொடர்ந்து, அக்.19-ம் தேதி சட்டப்பேரவை கூட்டத்தில், இதற்கான சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மசோதாவில் சில விளக்கங்களை ஆளுநர் கேட்டார். அதற்குஉடனடியாக பதில் அளிக்கப்பட்டது. பின்னர், 4 மாதங்கள் கழித்து, அந்த சட்ட மசோதாவை, தமிழகஅரசுக்கு சட்டமியற்ற அதிகாரமில்லை என்று கூறி ஆளுநர் திருப்பியனுப்பினார்.

இதையடுத்து, ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா சட்டப்பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரில் மீண்டும் நிறைவேற்றப்பட்டது. உடனடியாக மசோதா, தமிழக சட்டத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்பட்டது. அந்த மசோதா மற்றும் ஆளுநர் கோரிய விளக்கங்கள் என அனைத்தும் தமிழக சட்டத்துறையின் மூலம் ஆளுநருக்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, டெல்லி சென்ற ஆளுநர் ஆர்.என்.ரவி, மாலையில், மத்தியஉள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தார். அப்போது இந்த மசோதா குறித்து விவாதித்துள்ளதாகக் கூறப்பட்டது. அவர் சென்னை திரும்பியதும் மசோதா குறித்து பரிசீலிக்க வாய்ப்புள்ளது என்று எதிர்பார்க்கப்பட்டது. இரண்டாவது முறை நிறைவேற்றி அனுப்பப்படும் சட்ட மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கூறப்படும் நிலையில், அவரது முடிவு மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

அதேநேரத்தில், சில தினங்களுக்கு முன் ஒரு நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர் ரவி, "ஆளுநர் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைக்கிறார் என்றால், அது நிராகரிக்கப்பட்டதாகவே பொருள்" என்று பேசினார். அதும் பெரும் சர்ச்சையையும் விவாதத்தையும் கிளப்பியது.

இதன் தொடர்ச்சியாக, சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்ய, மத்திய அரசையும், குடியரசுத் தலைவரையும் வலியுறுத்தும், அரசின் தனித் தீர்மானம் நேற்று தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், தமிழக சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கு ஆளுநர் ஆர். என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். இந்தச் சட்டம் விரைவில் அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்டம் விளையாடி, பணத்தைத் தொலைத்து, நிம்மதியிழந்து இதுவரை 45-க்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் தேர்த்திருவிழாவில் சு.திருநாவுக்கரசர் பங்கேற்பு

**அன்னவாசல், ஏப்.11–**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் தேர்த்திருவிழாவில், திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் சு.திருநாவுக்கரசர், மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, இணை ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) சூரியநாராயணன், உதவி ஆணையர் அனிதா, வட்டாட்சியர் சக்திவேல், செயல் அலுவலர் முத்துராமன், பல்வேறு அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.





# இன்று

# 11-4-2023

பித்தம் நீங்கி உடல் பலம் பெற பனங்கிழங்கு சாப்பிடலாம்
சக வருடம் 1945 சைத்ரம் 21

சுபகிருது பங்குனி 28 | APR - TUE செவ்வாய் | ரமலான் 19 | தேய்பிறை 101 / 264

தேய். பஞ்சமி 01.51 (கா. 06.50) ஷஷ்டி 55.23 (கா. 04.15) கேட்டை 15.53 (மா.12.27) தியாஜ் 34.51 அகஸ் 30.29 சித்த 15.53 மேல் அமிர்த. அவமாகம். ஸ்ரீரங்கம் நம்பெருமாள் உற்சவாரம்பம். சமயபுரம் மாரியம்மன் பூத வாகனத்தில் வீதியுலா. ஸ்ரீகுற்றாலநாதர் வெள்ளி சப்பரத்தில் புறப்பாடு.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு | பரிகாரம் : பால் | மீன லக்கனம் இருப்பு நா. 0 வி. 25 | சந்திராஷ்டமம் கார்த்திகை ரோகிணி
கரணம் : 7.30-9 | சூரிய உதயம் : 6.06

கைப்பொருளற்றால் கட்டினவரும் பாரார்.

**இராசிபலன்**
மேஷம் - பொறுமை
ரிஷபம் - இன்பம்
மிதுனம் - அமைதி
கடகம் - போட்டி
சிம்மம் - ஆதரவு
கன்னி - உற்சாகம்
துலாம் - நட்பு
விருச்சி - பெருமை
தனுசு - ஆக்கம்
மகரம் - புகழ்
கும்பம் - அனுகூலம்
மீனம் - பக்தி

## சிந்திப்போம்... செயல்படுவோம்..










| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | ரூ. 4,434 | ரூ. 4,798 |

### அறந்தாங்கி அருகே

## மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம்



**அறந்தாங்கி, ஏப்.11-**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே கீழ்க்குடி - காராவயல் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வேலடிமுருகன் ஆலய பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு முதலாம் ஆண்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

இந்த போட்டியில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட மாடுகள் போட்டியில் கலந்து கொண்டன. பெரியமாடு, சிறியமாடு என இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் மொத்தம் 50க்கும் மேற்பட்ட இரட்டை மாட்டுவண்டிகள் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட பந்தைய இலக்கினை நோக்கி ஒன்றையொன்று முந்திச் சென்றன.

போட்டியில் இரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த மாட்டின் உரிமையாளர்களுக்கு ரொக்கப்பரிசும் கோப்கைகளும் வழங்கப்பட்டது. பந்தைய நிகழ்ச்சியை சாலையின் இரு புறமும் நின்று ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கண்டு ரசித்தனர். பந்தயத்தின்போது நாகுடி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## செய்யாறு தலைமை இடமாகக் கொண்டு புதிய வருவாய் மாவட்டம் அறிவிக்க கோரி பைக் பேரணி



**திருவண்ணாமலை, ஏப்.11 -**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு மக்கள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் செய்யாறு தலைமை இடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அறிவிக்க கோரி பைக் பேரணி திருவத்தூர் வேதபுரீஸ்வரர் கோயில் அருகில் தொடங்கியது. பேரணி காந்தி சாலை, மார்க்கெட், பஸ் ஸ்டாண்ட், ஆற்காடு சாலை வழியாக சப் கலெக்டர் அலுவலகத்தில் நிறைவடைந்தது.

இதில் சப் கலெக்டர் அலுவலகம் எதிரில் செய்யாறு தலைமை இடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அறிவிக்க கோரி கோஷங்கள் எழுப்பினர். பைக் பேரணியில் அனைத்து கட்சி பிரமுகர்கள், வியாபாரிகள், தன்னார்வலர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். தொடர்ந்து வியாபாரிகள் அனைத்து கட்சியினர், பல்வேறு சமூக அமைப்புகள் மூலமும், செய்யாறு மக்கள் முன்னேற்ற சங்கத்தின் மூலமும் 2300 மனுக்கள் செய்யாறு தலைமை இடமாகக் கொண்டு புதிய வருவாய் மாவட்டம் கோரி சப் கலெக்டர் அனாமிகாவிடம் மனுக்கள் வழங்கப்பட்டது.

செய்யாறு மக்கள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட கோரிக்கை மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது, 01.04.1959ம் ஆண்டில் செய்யாறு, திருவண்ணாமலை, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய வருவாய் கோட்டங்கள் உருவாக்கப்பட்டன. செய்யாறு கோட்டம் தவிர மற்ற அனைத்து வருவாய் கோட்டங்களும், மாவட்டங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் 64 வருடங்களாக செய்யாறில் செயல்பட்டுவரும் வருவாய் கோட்டத்தினை தலைமை இடமாகக் கொண்டு புதிய வருவாய் மாவட்டம் உருவாக்க வேண்டும். செய்யாறு, வெம்பாக்கம், வந்தவாசி தாலுகாகளில் உள்ள கிராமங்கள் சுமார் 150 கிலோமீட்டர் தூரம் பயணித்து தலைமை இடமான திருவண்ணாமலைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளதால் கால விரயமும் பண விரயமும் ஆகிறது. செய்யாறு தலைமை இடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்கப்பெற்றால் கிராம மக்கள், விவசாயிகள், மாணவர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனுக்குடன் அருகில் உள்ள செய்யாறு பகுதிக்கு எளிதாக வந்து செல்லவும் அரசு அலுவலர்களை தொடர்பு கொள்ளவும் வசதியாக இருக்கும்.

மேலும் வளர்ச்சி திட்டங்கள், அரசு நலத்திட்டங்கள் பேரிடர் காலத்திட்டங்கள் அனைத்தும் விரைவாக செயல்படுத்திட முடியும். சட்டம் ஒழுங்கு பாதிப்பு ஏற்படும் அவசர காலங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனடியாக காவல்துறையினரால் எடுக்க பேருதவியாக இருக்கும். இதனை கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 2016 ம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் செய்யாறு தலைமை இடமாகக் கொண்டு புதிய வருவாய் மாவட்டம் உருவாக்கப்படும் என தெரிவித்த வாக்குறுதியினை குறிப்பிட்டிருந்தனர். தமிழக முதல்வர் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றிடும் வகையில் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பைக் பேரணி நடத்தி மனுவினை வழங்கினர்.

### அரியலூர் மாவட்டம்

## ஆண்டிமடம் பகுதியில் சாலை மேம்பாட்டு பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் துவக்கி வைப்பு



**அரியலூர், ஏப்.11-**

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் பகுதியில், பல்வேறு சாலை மேம்பாட்டு பணிகளை, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், அணிக்குதிச்சான் கிராமத்தில், நெடுஞ்சாலைத் துறை - நபார்டு மற்றும் கிராம சாலைகள் அலகு சார்பில், பூவானிப்பட்டு முதல் கீழநெடுவாய் செல்லும் சாலை, 5.25 கோடி மதிப்பில் தரம் உயர்த்துதல் பணியினை, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக, ஆண்டிமடம்- விருத்தாசலம் சாலையில் கிரீன் லேண்ட் பள்ளி அருகே, நெடுஞ்சாலைத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், அரியலூர் மாவட்டம், மதனத்தூரில் இருந்து, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், வழியாக கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வரையான இரண்டு வழி சாலையை, 60 கோடி ரூபாய் மதிப்பில், நான்கு வழி சாலையாக தரம் உயர்த்தி வலுப்படுத்தும் திட்டத்தையும், அமைச்சர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், திருச்சி நபார்டு கோட்டப் பொறியாளர் பெ.வடிவேல், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளி பிரபு, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், அரியலூர் உதவிக் கோட்டப் பொறியாளர் வி.பி.சரவணன், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர்கள் கருணாநிதி சிட்டிபாபு, உதவி பொறியாளர் இளைய பிரபுராஜன், ராஜா, விக்கிரமங்கலம் கண்ணன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## போலீசார் ரோந்து பணி மேற்கொண்ட போது கஞ்சா வைத்திருந்த சிறுவன் கைது

**ஊத்துக்கோட்டை, ஏப்.11-**

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் ரோந்து பணி மேற்கொண்டனர். சின்னம்பேடு ஊராட்சி, அய்யனார் மேடு பஸ் நிறுத்தம் அருகே சந்தேகத்துக்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்த 17 வயது மதிக்கத்தக்க சிறுவனை போலீசார் பிடித்து விசாரணை செய்தனர். அப்போது அவன் சுமார் 100 கிராம் எடை கொண்ட கஞ்சா பொட்டலங்களை மறைத்து வைத்து விற்பனை செய்ய நின்று கொண்டிருந்ததை ஒப்புக்கொண்டான். எனவே போலீசார் அந்த சிறுவனை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.



**▶ புதுவை அரசு காரைக்கால் மாவட்டம் கால்நடை பராமரிப்பு துறை மூலமாக திருநள்ளாறு தொகுதிக்கு உட்பட்ட பயணாளிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக கால்நடைகள் மற்றும் கோழிகள் வளர்ப்பு கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் சிறந்து விளங்கிய பயனாளிகளுக்கு திருநள்ளாறு சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.சிவா தலைமையில் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் லதா மங்கேஷ்கர் முன்னிலையில் பயனாளிகளுக்கு பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினர். இந்நிகழ்வில் இணை இயக்குனர் கோபிநாத் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். இந்த கண்காட்சியில் 146 மாடு மற்றும் கிடாரிகளும் 83 கோழிகளுடன் அதன் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.**



**▶ திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வடக்கு வட்டார காங்கிரஸ் கட்சியின் சார்பில் பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி பெரியபாளையத்தில் உள்ள எல்.கே.எஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு எல்லாபுரம் வடக்கு வட்டார காங்கிரஸ் கட்சித் தலைவர் வி.மூர்த்தி தலைமை தாங்கினார். இதில் திருவள்ளூர் வடக்கு மாவட்ட துணைத் தலைவர் சத்தியநாராயணன், மாவட்ட பொதுச் செயலாளர் சிவன் ஆச்சாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் திருவள்ளூர் வடக்கு மாவட்ட மகிளா காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஜோதி சுதாகர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பேசினார். இந்நிகழ்ச்சியில் ஜி.ராமதாஸ், இ.டேவிட்செல்லதுரை, ஜெ.சேட், எஸ்.மூர்த்தி, பி.பாபு, சுப்ரமணி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர். இதில் ராகுல் காந்தியை எம்பி பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்ததை கண்டித்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை எல்லாபுரம் வடக்கு வட்டார காங்கிரஸ் சார்பில் செய்திருந்தனர்.**

## அரிமளம் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் அதிஷ்டானத்தில் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் திவ்யசரித நூல்வெளியீட்டு விழா



**அரிமளம், ஏப்.11-**

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ராமகிருஷ்ணன் சுப்ரமணியனால் எழுதப்பட்ட "கோடகநல்லூர் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் திவ்யசரித" நூல் வெளியீட்டு விழா, அரிமளம் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் அதிஷ்டானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கோயம்புத்தூர் ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் சேவா சங்கத்தின் தலைவர் ஸ்ரீ ஸ்ரீராம் தலைமை வகித்து நூலை வெளியிட்டார். நூலை அறிமுகம் செய்துவைத்து 'முத்தமிழ் அரசி' சரஸ்வதி ராமநாதன் உரையாற்றினார். 'பொற்கிழிக் கவிஞர்' சொ.சொ.மீ சுந்தரம் 'ஸ்ரீசுந்தரர் மகிமை' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். நூல் ஆசிரியர் அரிமளம் ராமகிருஷ்ணன் சுப்ரமணியன் ஏற்புரை நிகழ்த்தினார்.

முன்னதாக அதிஷ்டான மூலஸ்தான பாணலிங்கத்திற்கு காலையில் சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெற்றன. மாலையில் உமையாள்புரம் மாலி இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. மதியமும், இரவும் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஊர் பொதுமக்களும், ஸ்ரீ ஸ்வாமிகளின் பக்தர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு நூல் ஆசிரியரைப் பாராட்டினர். முன்னதாக அனைவரையும் அதிஷ்டானத்தின் பரம்பரை அறங்காவலர் சோமசுந்தரம் வரவேற்று பேசினார். நிறைவாக ச.முத்துக்குமார் நன்றி கூறினார்.

### திருநாவலூர் அருகே

## மின்கசிவினால் இரண்டு கூரை வீடுகள் எரிந்து சேதம்



**கள்ளக்குறிச்சி, ஏப்.11-**

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட, நல்லாளகுப்பம் கிராமத்தில் வசித்து வரும் சக்திவேல் மகன்கள் ராஜாராமன், கோவிந்தராஜ் ஆகியோரின் கூரை வீடுகள் மின்கசிவின் காரணமாக தீப்பிடித்து எரிந்ததால், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் உடனடியாக உளுந்தூர்பேட்டை தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இத்தகவலறிந்த உளுந்தூர்பேட்டை தீயணைப்பு வீரர்கள், பரந்தாமன், லியாகத்அலி, சந்தோஷ்குமார், பால்ராஜ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்து அருகில் உள்ள வீடுகளுக்கு பரவாமல் தடுத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும் இரண்டு கூரை வீடுகளும் முழுவதுமாக எரிந்தன. வீட்டில் உள்ள பீரோ, கட்டில் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் உள்பட அனைத்தும் எரிந்து சாம்பலாகின.

## ஈஸ்டர் பவனி விழா



**கன்னியாகுமரி, ஏப்.11-**

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் பகுதியில் லண்டன் மிஷன் திருச்சபை மங்கலம், இரட்சணிய சேனை சபை மங்கலம், சிஎஸ்ஐ திருச்சபை ஈஞ்சக்கோடு உள்ளிட்ட திருச்சபைகள் இணைந்து பிரமாண்ட ஈஸ்டர் பவனி நடைபெற்றது. இதில் அனைத்து திருச்சபையைச் சார்ந்த ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பவனியானது ஈஞ்சக்கோடு, பொன்மனை, மங்கலம், குலசேகரம், காவஸ்தலம் வாயிலாக சென்று ஈஞ்சக்கோடு பகுதியில் நிறைவுபெற்றது.

## அரியலூரில் நகர அதிமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா



**அரியலூர், ஏப்.11-**

அரியலூர் நகர அதிமுக சார்பில், தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

அரியலூர் பேருந்து நிலையம், எம்ஜிஆர் -ஜெயலலிதா உருவச் சிலை வளாகம் அருகே, நகர அதிமுக சார்பில் அமைக்கப்பட்ட தண்ணீர் பந்தல் திறப்பு விழாவில், கட்சியின் அரியலூர் நகர செயலாளர் ஏ.பி.செந்தில் வரவேற்று பேசினார். அதிமுக அரியலூர் மாவட்ட செயலாளர் மற்றும் முன்னாள் அரசு தலைமை கொறடா தாமரை எஸ். ராஜேந்திரன், தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நீர் மோர், பானகம், ஜூஸ், இளநீர், தர்பூசணி உள்ளிட்டவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அதிமுக ஒன்றிய செயலாளர் பொய்யூர் பாலசுப்ரமணியன், மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் வெங்கடாசலபதி, வக்கீல் சுகுமார், எம்ஜிஆர் மன்ற நகரச் செயலாளர் பழனியாண்டி, முன்னாள் நகராட்சி கவுன்சிலர்கள் குமார், கருணாநிதி, சிவஞானம், ஒன்றிய கவுன்சிலர் வெள்ளைச்சாமி, வாலாஜா நகரம் பண்ணை ராஜா, புரட்சி சிவா உள்பட, ஏராளமானோர் பங்கேற்றனர்.



**▶ காரைக்காலில் மாவட்ட கலெக்டராக குலோத்துங்கன் பதவி ஏற்றவுடன் அரசு அதிகாரிகள் குறித்த நேரத்தில் பணிக்கு வர வேண்டும் என்று அறிவுறுத்தினார். இந்நிலையில் நேற்று காலை மாவட்ட கலெக்டர் குலோத்துங்கன், காரைக்கால் மதகடியில் காமராஜர் வளாகத்தில் அமைந்துள்ள பல்வேறு அரசு அலுவலகங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அனைத்து அலுவலகங்களிலும் வருகை பதிவேட்டை பார்வையிட்ட அவர் சரியான நேரத்தில் பணிக்கு வர வேண்டும் என்றும் அனைவரையும் அறிவுறுத்தினார்.**



**▶ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே பழனிசாமியை, சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் நேற்று அகில இந்திய மாநில அரசு நான்காம் பிரிவு ஊழியர்கள் சம்மேளனத்தின் அகில இந்தியத் தலைவர் கணேசன் மற்றும் தமிழ் நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் மாநில மையச் சங்கத்தின் மாநிலத் தலைவர் மதுரம், மாநிலப் பொதுச் செயலாளர் நடராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து, கோரிக்கை மனுவினை அளித்தனர்.**



▶ மதுரை மடிசியா ஹாலில் கட்டுமான பொறியாளர்கள் சங்க பொது குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கட்டுமான பொறியாளர்கள் சங்க தலைவராக சஞ்ஜய் பதவியேற்றுக்கொண்டார். அதனைத்தொடர்ந்து புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழாவும் நடைபெற்றது. இந்நிகழ்வில் உடன் பொறியாளர் துணைத் தலைவர் பொன் ரவிச்சந்திரன் மற்றும் பொறியாளர் துணைத் தலைவர் சதீஷ்குமார், குமரேஷ் பாபு செயலாளர், இணைச் செயலாளர் சூரியகுமார், பொருளாளர் வெங்கடேஷ் பாபு, சிறப்பு விருந்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் வெங்கடேசன், தமிழ்நாடு மாநிலத் தலைவர் இளங்கோவன், முன்னாள் தலைவர்கள் பொறியாளர் வெற்றி குமரன், குணசேகரன், அறிவழகன், ரமேஷ் குமார் மற்றும் பொறியாளர்களும், வல்லுநர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



▶ புதுக்கோட்டை ஸ்ரீ நார்த்தாமலை முத்துமாரியம்மன் கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு பழைய பேருந்து நிலைய ஆட்டோ ஓட்டுநர்கள் உரிமையாளர் சார்பில் 23ம் ஆண்டு தண்ணீர் பந்தல், நீர்மோர், பொங்கல் வழங்கும் நிகழ்ச்சியில் திமுக நகர கழக செயலாளர் ஆ.செந்தில், நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், எஸ். வி.எஸ் மோட்டார்ஸ் உரிமையாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து பக்தர்களுக்கு பிரசாதத்தை வழங்கினர். அருகில் திமுக 38வது வட்ட கழக செயலாளர் மாலைமீடு க.பிரபு உள்ளார்.

# புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு ஆலோசனைக்கூட்டத்தில் அதிகாரிகளுக்கு கண்டனம்

புதுக்கோட்டை, ஏப்.11-

புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு சங்க அலுவலகத்தில் மாவட்ட தலைவர் அஸ்ரப் அன்சாரி தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து அச்சங்கம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளிகள் மாவட்ட கல்வி அலுவலர் அவர்களின் செயல்பாடுகள் ஆட்சேபனைக்குரியதாக உள்ளது. தனியார் பள்ளிகள் ஒப்புதல், புதுப்பித்தல் ஆணை வழங்குவதில் பழைய நடைமுறையை பின்பற்றாமல் தன்னிச்சையாக செயல்படுகிறார். மாவட்ட தனியார் பள்ளிகள் அலுவலகம் செயல்பட தனியார் பள்ளி நிர்வாகிகளை மிரட்டி வற்புறுத்தி தேவையானவற்றை பூர்த்தி செய்து கொள்கிறார். கோப்புகளை பரிசீலனை செய்யாமல் காலம் தாழ்த்தி தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும், ஆணை வழங்குவது கண்டனத்துக்குறியது. மாவட்ட கல்வி அலுவலக வளாகத்தில் கூட்ட அரங்கம் இருந்தும் தனியார் பள்ளிகள் முதல்வர்கள் கூட்டத்தை தனக்கு வேண்டிய குறிபிட்ட தனியார் பள்ளியில் மட்டும் நடத்துவது கண்டனத்துக்குறியது.

மாவட்ட கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் விக்டர் தனது அதிகார வரம்பை மீறி செயல்படுகிறார். அவரை உடனடியாக இட மாற்றம் செய்ய வேண்டும்.மேற்கூரிய தீர்மானங்களை குறித்து நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளோம். மேற்கூரிய கூட்டத்தில் 50க்கு மேற்பட்ட தனியார் பள்ளிகள் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில், அதிநவீன மின்னணு வாகனத்தின் மூலம் சட்டமன்ற கூட்டத்தொடரின் செய்தி மக்கள் தொடர்பு துறையின் மானியக்கோரிக்கை நடைபெற்ற நிகழ்வினை பொதுமக்களிடையே நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.



▶ திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 20 ஊராட்சிகளுக்கு தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) சார்பில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக மேற்கொள்ள தலா ரூ.8.72 லட்சம் மதிப்பீட்டில் ரூ.1.74 கோடி மதிப்பிலான டிராக்டர்களை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், ஒன்றியக்குழுத்தலைவர்கள் முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# தென்காசி மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி, ஏப்.11-

தென்காசி மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பாகமாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதிய பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்றது.

உண்மைக்கு புறம்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல்காந்தியை பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்த பாசிச பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார் தலைமை வகித்தார். இதில் முன்னாள் சேர்மன் சட்டநாதன், மாநில செயற்குழு உறுப்பினர் சங்கை கணேசன், சுரண்டை சேர்மன் வள்ளி முருகன், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், தென்காசி நகர தலைவர் மாடசாமி ஜோதிடர், தென்காசி மாவட்ட பொதுச்செயலாளர் முகமது ரபி, கீழப்பாவூர் பேரூராட்சி துணைத் தலைவர் ராஜசேகர், மாவட்ட செயற்குழு உறுப்பினர் தாயார் தோப்பு ராமர், தென்காசி சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் பிரேம்குமார், வட்டாரத் தலைவர் ஏபிடி மகேந்திரன் வாசு, சுரண்டை நகர இளைஞர் காங்கிரஸ் சந்திரசேகர், கடையநல்லூர் நகரத் தலைவர் அன்னக்கிளி அபுதாஹிர், செங்கோட்டை நகர இளைஞர் காங்கிரஸ் மணிகண்டன், தென்காசி நகர இளைஞர் காங்கிரஸ் முத்துக்குமார், தென்காசி நகர பொருளாளர் ஈஸ்வரன், கீழப்பாவூர் வட்டார இளைஞர் காங்கிரஸ் தலைவர் சின்ன ராசா, மாநில பேச்சாளர் பெரியசாமி, கீழப்பாவூர் நகர தலைவர் விஜய் சிங்கக்குட்டி, எஸ்சி, எஸ்டி, மாவட்டத் தலைவர் ராமச்சந்திரன், ஆலங்குளம் கோடீஸ்வரன், ஜெகன், கடையநல்லூர் ரமேஷ், செங்கோட்டை இலக்கிய அணி ராஜீவ் காந்தி ஆகியோர் கலந்து கொண்டு இளைஞர் காங்கிரஸ் சார்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சி.ஆர்.பி.எப் கணினித் தேர்வை பிற மாநில மொழிகளிலும் நடத்த வேண்டும் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை



சென்னை, ஏப்.11-

இந்தி பேசாத மாநில இளைஞர்களும் சி.ஆர்.பி.எப்-ல் பணியாற்ற சமவாய்ப்பு பெறும் வகையில் தமிழ் உள்ளிட்ட பிற மாநில மொழிகளிலும் இக்கணினித் தேர்வை நடத்துவதற்கு ஏதுவாக அறிவிக்கையில் மாற்றங்களைச் செய்ய மத்தியப் பின்னிருப்புக் காவல்படை அதிகாரிகளை அறிவுறுத்துமாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை வைத்துள்ளார்.

இதுகுறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மத்திய பின்னிருப்புக் காவல் படையில் (CRPF) ஆட்சேர்க்கைக்கான அறிவிக்கை தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு எழுதிய கடிதம், மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின்கீழ் வரும் மத்திய பின்னிருப்புக் காவல் படையில் (CRPF) 9,212 காவலர்கள் ஆட்சேர்க்கைக்கான அறிவிக்கை தொடர்பாகத் தங்களது கனிவான கவனத்தைக் கோருகிறேன். நமது அரசமைப்புச்சட்டத்தின் எட்டாவது அட்டவணை தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளை அலுவல் மொழிகளாக அங்கீகரிக்கும்போதிலும், மேற்கூறிய ஆட்சேர்க்கைக்கான கணினித் தேர்வு ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருப்பது இளைஞரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு சி.ஆர். பி.எப் வெளியிட்டுள்ள அறிவிக்கையின்படி மொத்தமுள்ள 9,212 காலிப் பணியிடங்களில் 579 பணியிடங்கள் தமிழ்நாட்டில் நிரப்பப்படவுள்ளன. தமிழ்நாட்டில் 12 மையங்களில் இந்தத் தேர்வு நடைபெற உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் இருந்து இந்த தேர்வுக்கு விண்ணப்பிப்போர் சொந்த மாநிலத்திலேயே தங்கள் தாய்மொழியில் தேர்வினை எழுத முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அறிவிக்கையின் மற்றொரு மறைமுக அம்சமாக, மொத்தமுள்ள 100 மதிப்பெண்களில் 25 மதிப்பெண்கள் இந்தி மொழியில் அடிப்படைப் புரிதலுக்கெனஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் இத்தேர்வு இந்தி மொழி பேசுவோருக்கே மிகவும் சாதகமானதாக அமைந்துள்ளது. சுருங்கச் சொன்னால், மத்திய பின்னிருப்புக் காவல்படையின் இந்த அறிவிக்கை தமிழ்நாட்டில் இருந்து விண்ணப்பிப்போரின் நலனுக்கு முற்றிலும் எதிரானதாக உள்ளது. இது தன்னிச்சையானது மட்டுமல்லாமல் பாகுபாடு காட்டக்கூடியதும் ஆகும்.

விருப்புவெறுப்பின்றி இந்த அறிவிக்கையை நோக்குகையில், இது தமிழ்நாட்டில் இருந்து விண்ணப்பிப்போருக்கு எதிரான பாகுபாட்டுடனும், அவர்கள் நாட்டின் துணைராணுவப் படையில் பணியாற்றும் வாய்ப்பைப் பறிக்கும் நோக்குடனும் அமைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே கணினித் தேர்வு நடத்தப்படும் என்ற அறிவிப்பானது இத்தேர்வை எழுத விரும்பும் இளைஞர்களுக்கு அரசியலமைப்பு வழங்கியுள்ள உரிமையைப் பாதிப்பதாகவும், அரசுப் பணித் தேர்வில் சம வாய்ப்பை மறுப்பதாகவும் இருக்கிறது.

எனவே, தாங்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, இந்தி பேசாத மாநில இளைஞர்களும் சி.ஆர்.பி.எப்-ல் பணியாற்ற சமவாய்ப்புபெறும் வகையில் தமிழ் உள்ளிட்ட பிறமாநிலமொழிகளிலும்இக்கணினித்தேர்வை நடத்துவதற்கு ஏதுவாக அறிவிக்கையில் மாற்றங்களைச்செய்ய மத்தியப்பின்னிருப்புக் காவல்படை அதிகாரிகளை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# ஆதனக்கோட்டை விரடி விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தி விழா



ஆதனக்கோட்டை, ஏப்.11-

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள குப்பையன்பட்டி கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ விரடி விநாயகர் ஆலயத்தில் மஹா சங்கடஹர சதுர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த விழாவில் விநாயகருக்கு திரவியபொடி அபிஷேகம், பால் அபிஷேகம், தயிர் அபிஷேகம், அரிசிமாவு அபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம், சந்தன அபிஷேகம், இளநீர் அபிஷேகம், பன்னீர் அபிஷேகம் உள்ளிட்ட ஒன்பது வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது.

பின்னர் விநாயகர் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டு விரடிவிநாயகர் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இந்த சங்கடஹர சதுர்த்தி விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு விரடி விநாயகரை தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

# திருச்சியில் வரும் 24ம் தேதி தமிழ்நாட்டிலுள்ள அதிமுக தொண்டர்கள் லட்சக்கணக்கில் கூடி கட்சியின் வலிமையை நிரூபிப்பார்கள் : ஓ.பன்னீர்செல்வம்



மதுரை, ஏப்.11-

திருச்சியில் வரும் 24ம் தேதி நடைபெறவுள்ள முப்பெரும் விழாவில் தமிழ்நாட்டிலுள்ள அதிமுக தொண்டர்கள் லட்சக்கணக்கில் கூடி கட்சியின் வலிமையை நிரூபிப்பார்கள் என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது, "முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா, கட்சி தோன்றி 50 ஆண்டு பரிபூரண வெற்றியைக் கண்டது, 51 ஆண்டில் அடியெடுத்து வைக்கும் விழா என, முப்பெரும் விழா திருச்சியில் வரும் 24ம் தேதி நடைபெற இருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள அதிமுக தொண்டர்கள் லட்சக்கணக்கில் கூடி கட்சியின் வலிமையை அங்கே நிரூபிப்பார்கள். கட்சியிலிருந்து முன்பு நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, முன்னாள் எம்பி கே.சி.பழனிச்சாமி போன்றோர்களுக்கு உறுதியாக அழைப்பு விடுக்கப்படும். அவர்கள் தொடர்ந்து கட்சியில் தான் இருக்கின்றனர். கட்சியின் மூத்த முன்னோடிகள் அனைவருக்கும் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படும். அவர்கள் நிச்சயம் பங்கேற்பர். திருச்சி மாநாட்டில் எவ்வளவு பேர் பங்கேற்பர் என, நீங்களும் நேரடியாக பார்க்கத்தான் போகிறீர்கள்" என தெரிவித்தார்.

மேலும், சசிகலா போன்றவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுமா என்ற கேள்விக்கு பதிலளித்த, ஓ.பன்னீர்செல்வம், முறைப்படியான அறிவிப்பு ஒவ்வொன்றாக வரும். அனைவரும் கலந்து கொள்வார்கள்" எனக்கூறினார்.



▶ மதுரை மாவட்டத்தில் மத்திய சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுநிதியில் இருந்து ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது மாவட்ட கலெக்டர் எஸ்.அனீஷ் சேகர், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆகியோர் உடன் இருந்தனர்.

# இந்தியாவில் 2022ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி 3,167 புலிகள் உள்ளன - பிரதமர் மோடி தகவல்



மைசூரு, ஏப்.11-

இந்தியாவில் 2022ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி 3,167 புலிகள் உள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி நேற்று கர்நாடகாவின் சாம்ராஜ்நகர் மாவட்டம் பந்திப்பூரில் உள்ள புலிகள் பாதுகாப்பு வன சரணாலயத்தை பார்வையிட்டார். புலிகள் சரணாலயத்தில் 20 கிலோமீட்டர் வனப்பகுதிக்குள் சென்ற பிரதமர் மோடி புலிகள் உள்ளிட்ட வனவிலங்குகளை பார்வையிட்டார். பின்னர், பந்திப்பூர் புலிகள் பாதுகாப்பு வன சரணாலயத்தில் இருந்து சாலை மார்க்கமாக காரில் பிரதமர் மோடி தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம் முதுமலைக்கு வந்தடைந்தார். முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமிற்கு வந்த பிரதமர் மோடி யானைகளுக்கு உணவு அளித்தார். முதுமலை பயணத்தை முடித்துக்கொண்டு நாட்டில் உள்ள புலிகளை பாதுகாக்க புலிகள் திட்டம் (Project Tiger) என்ற பெயரில் தொடக்கப்பட்ட திட்டம் 50ம் ஆண்டை எட்டியுள்ள நிலையில் அதன் பொன் விழா ஆண்டு நேற்று மைசூரில் நடைபெற்றது.

அதில் பிரதமர் மோடி பங்கேற்று பேசியதாவது, "இந்தியாவில் 2006ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,411 புலிகள் இருந்தன. 2010ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1706 புலிகள் இருந்தன. 2018ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 2,967 ஆக அதிகரித்தது. 2018ம் ஆண்டு 2,967 புலிகள் இருந்த நிலையில் தற்போது 2022ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி 3,167 புலிகள் உள்ளன" என்றார். மேலும், அடுத்த 25 ஆண்டுகளில் புலிகளைப் பாதுகாப்பதற்கான தொலைநோக்குப்பார்வையை முன்வைக்கும் 'Amrit Kaal Ka Tiger Vision' என்ற சிறு புத்தகத்தையும் அவர் வெளியிட்டார்.

மேலும் நாட்டில் உள்ள புலிகளை பாதுகாக்க 1973-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசு 'புலிகள் திட்டத்தை' (Project Tiger) தொடங்கியது. அப்போது முதல் புலிகளை பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கையின் பலனாக இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை மெல்ல அதிகரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒருங்கிணைந்த நீதிமன்றத்தின் சார்பாக மாபெரும் விழிப்புணர்வு பேரணி




கள்ளக்குறிச்சி, ஏப்.11-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒருங்கிணைந்த நீதிமன்றத்தின் சார்பாக சமரச மற்றும் தீர்வு மைய தினத்தை முன்னிட்டு மாபெரும் சமரச தீர்வு மைய விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

இப்பேரணி உளுந்தூர்பேட்டை சார்பு நீதிபதி ஸ்ரீராம் தலைமையில், காமராஜர் சிலை அருகில் இருந்து தொடங்கி பேருந்து நிலையம் வழியாக பொதுமக்கள் அதிகளவில் கூடும் சாலை வழியாக பேரணி நடைபெற்றது. அப்பொழுது பொதுமக்கள் தங்களது நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள வழக்குகளை சமரச மற்றும் தீர்வுமைய தினத்தில் கலந்து கொண்டு பயன் பெறும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் குற்றவியல் நீதித்துறை நீதிபதி விஜயராஜேஷ், மாவட்ட உரிமையியல் நீதிபதி விக்னேஷ்பிரபு, மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிபதி இலக்கியா மற்றும் வழக்கறிஞர் சங்க தலைவர் மணிராஜ், செயலர் காமராஜ், சமரச வழக்கறிஞர்கள் திலீப், செல்வராஜ், அண்ணாதுரை, ஆறுமுகம் மற்றும் வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் மாவட்ட கலெக்டர் வளாகத்தில் போதைப் பொருளை கட்டுப்படுத்துவது மற்றும் அறவே ஒழிப்பது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம்



காரைக்கால், ஏப்.11-

புதுவை மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் போதைப் பொருளை கட்டுப்படுத்துவது மற்றும் அறவே ஒழிப்பது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் குலோத்துங்கன் தலைமையில் நேற்று மாவட்ட கலெக்டர் வளாகத்தில் அரசு அதிகாரிகளுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மற்றும் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்), துணை மாவட்ட ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை), காவல் கண்காணிப்பாளர்கள் (வடக்கு) மற்றும் (தெற்கு) மற்றும் நலவழித்துறை, கல்வித்துறை, வருவாய் துறை, காவல்துறை, சமூக நலத்துறை, மேலும் அனைத்து கொம்யூன் ஆணையர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலெக்டர் கூறுகையில், பள்ளி மாணவர்களுக்கு சமூக நலத்துறை மூலம் பல்வேறு கட்டங்களாக விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட வேண்டும் என்றும், மேலும் பள்ளி அருகிலும் மற்றும் கோயில் அருகிலும் பெட்டிக்கடைகளில் போதைப்பொருள் உள்ளதா என அடிக்கடி காவல்துறையினர் சோதனை செய்ய வேண்டும் என்றும் மேலும் கடல் வழியாக போதைப்பொருள் காரைக்காலுக்கு வருகிறதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும் எனவும் கலெக்டர் கேட்டுக் கொண்டார். மேலும் அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் அந்தந்த கொம்யூனில் உள்ள அரசு பள்ளி மற்றும் தனியார் பள்ளிகளில் அடிக்கடி ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# ஜெயங்கொண்டம் நகராட்சி நவீன எரிவாயு தகன மேடை மூடப்பட்டுள்ளது : பாமக நகர செயலாளர் பரசுராமன் குற்றச்சாட்டு



**அரியலூர், ஏப்.11–**

ஜெயங்கொண்டம் நகராட்சி பகுதியில் கட்டப்பட்ட நவீன எரி வாயு தகன மேடை மூடப்பட்டுள்ளதாக, பாட்டாளி மக்கள் கட்சி நகரச் செயலாளர் பரசுராமன் குற்றம் சாட்டியுள்ளார், இது பற்றி அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது,

ஜெயங்கொண்டம் நகராட்சி பகுதியில், சுமார் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, பேரிடர் கொரோனா பெருந்தொற்று கால கட்டத்தில் திறக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வந்த நவீன எரிவாயு தகன மேடை, மூன்றே மாதங்களில் மூடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது, இறுதி சடங்கு செலவுக்கு வழியில்லாத விளிம்பு நிலை மக்கள் பலரும் இதனால் வேதனை அடைந்துள்ளனர். சாதி, மத வேறுபாடின்றி, இறுதி சடங்கில் கூட பாகுபாடு பார்க்க கூடாது என்கிற நோக்கத்தில், இந்த நவீன எரிவாயு தகன மேடை செயல் படுத்தப்பட்டு வந்தது.


ஆனால் தற்போது, அனாதை பிணங்கள் கூட அடக்கம் அல்லது தகனம் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர், ஜெயங்கொண்டம் நகராட்சித் தலைவர் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் உரிய கவனம் செலுத்தி, ஜெயங்கொண்டம் நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்ட நவீன எரிவாயு தகன மேடை மீண்டும் செயல்பட, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



▶ மதுரை செல்லம்பட்டி வடக்கு ஒன்றிய பாப்பாபட்டி ஒச்சாண்டம்மன் பெரிய கோவில் அருகில் தி.மு.க செயல்வீரர்கள் கூட்டமும், மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா, வாக்குச்சாவடி முகவர்கள் நியமனம், புதிதாக திமுக உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் திமுக வளர்ச்சிப் பணிகள் பற்றி எடுத்துரைத்து பேசினார். உடன் உசிலம்பட்டி தொகுதி மேற்பார்வையாளர் முன்னாள் எம்.எல்.ஏ மாரியப்பன் கென்னடி,உசிலை வடக்கு ஒன்றியச் செயலாளர் அஜித்பாண்டி மற்றும் செல்லம்பட்டி வடக்கு ஒன்றிய தி.மு.க தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கடிதம் எழுதி வைத்துவிட்டு மூன்று மாத கர்ப்பிணி தூக்கிட்டு தற்கொலை காதலன் குடும்பத்தினர் 3 பேரை கைது செய்து போலீசார் விசாரணை





**சீர்காழி, ஏப்.11–**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே பெருந்தோட்டம் கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண் பிரபாவதி (20). இவர் அதே கிராமத்தை சேர்ந்த நடராஜ் மகன் ஆனந்தராஜ் (26) என்பவரை காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில் பிரபாவதி கர்ப்பமாக இருப்பதாகவும், இது குறித்து ஆனந்தராஜ் இடம் கூறி அவர் வீட்டில் பிரபாவதி தெரிவித்துள்ளார். ஆனால் ஆனந்தராஜின் அண்ணன்கள் அலெக்ஸாண்டர், அர்ஜுனன் மற்றும் அர்ஜுனன் மனைவி ரஞ்சனி ஆகியோர் திருமணம் செய்து வைக்க முடியாது என கூறியதாக கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த பிரபாவதி கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். அதில் தன்னுடைய மரணத்திற்கு மூன்று பேர்தான் காரணம் என எழுதி வைத்துள்ளார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த திருவெண்காடு போலீசார், உடலை கைப்பற்றி சீர்காழி அரசு மருத்துவமனைக்கு உடல் கூறு ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளனர். மேலும் கடிதத்தை கைப்பற்றி, அலெக்சாண்டர், அர்ஜுனன், ரஞ்சனி ஆகிய மூன்று பேரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தருமபுரம் ஆதினத்திற்கு சொந்தமான இரு வேறு கோயில்களில் தருமபுரம் ஆதீனம் முன்னிலையில் மகா கும்பாபிஷேகம்



**சீர்காழி, ஏப்.11–**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் அமைந்துள்ளது பிரசித்தி பெற்ற ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தின் உப கோயிலாக இருந்து வரும், பழமை வாய்ந்த ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் மற்றும் ஸ்ரீ வாஹீஸ்வரி உடனாகிய பதினென்புரணேவரர் கோயில் கும்பாபிஷேக விழா தர்மபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள் முன்னிலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த எட்டாம் தேதி முதல் கால யாகசாலை பூஜை தொடங்கி நடைபெற்று வந்தது. அதனைத் தொடர்ந்து கும்பாபிஷேக தினமான நேற்று நான்காம் கால யாகசாலை பூஜைகள் நிறைவடைந்து பூர்ணாஹுதி நடைபெற்றது.

தொடர்ந்து யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீர் அடங்கிய கடங்களை மேளதாள வாத்தியங்கள் முழங்க சிவாச்சாரியார்கள் தலையில் சுமந்து கோயிலை வலம் வந்து கோயில் விமான கலசத்தை அடைந்தனர்.

அங்கு வேத விற்பன்னர்கள் வேத மந்திரங்கள் முழங்க, கருட பகவான் வானில் வட்டமிட கோயில் கோபுர கலசங்களில் புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர். தொடர்ந்து மூலவர் சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவை காண சீர்காழி சுற்று வட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் திரண்டு இருந்தனர்.

# தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையை சுற்றி பேரூராட்சி நிர்வாகம் சார்பில் முழுமையான தூய்மை பணி

**தரங்கம்பாடி, ஏப்.11–**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி கடற்கரையையொட்டி வரலாற்று சின்னமாக போற்றப்படும் டேனிஷ் கோட்டை அமைந்துள்ளது. இந்த சுற்றுலா மையத்திற்கு தினமும் வெளி நாடு, வெளி மாநில மற்றும் வெளி மாவட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

சுற்றுலா மையத்தில் தரங்கம்பாடி பேரூராட்சி நிர்வாகம் சார்பில் முழுமையான தூய்மை பணி நடைபெற்றது. இந்த பணியை கேரளா மாநில தலைமை தேர்தல் அலுவலர் சஞ்சய் கவுல், மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்.



அப்போது மாவட்ட கலெக்டர் கூறுகையில், மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் தூய்மை பணி நடைபெற்று வருகிறது. அந்த வகையில் தரங்கம்பாடி கடற்கரை மற்றும் டேனிஷ் கோட்டையில் தற்போது தூய்மை பணி தொடங்கி வைக்கப்பட்டது. இங்கு தினமும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வந்துசெல்வதால், சுற்றுப் பகுதியை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வலியுறுத்தப்பட்டுள்ளது.

தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையில் விரைவில் மறு சீரமைக்கும் பணி நடைபெற உள்ளது. இங்கு தூய்மை பணியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மீண்டும் மஞ்சப்பை வழங்கியுள்ளோம். தரங்கம்பாடி பேரூராட்சியில் ரூ.7 கோடி செலவில் பேவர் பிளாக் சாலை, தார்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பொறையார் பகுதியில் கீழ் மேட்டுப்பாளையம் சோழன் நகர், கழுவன்திட்டு, சிந்தாரிப்பேட்டை, புஷ்ப பாலகுரு நகர், சாத்தங்குடி ஆகிய பகுதிகளில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.2.34 கோடி செலவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பொறையார் திடக்கழிவு மேலாண்மையில் தரைதளம், மேற்கூரை ரூ.37 லட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன. தரங்கம்பாடியில் ராதாகிருஷ்ணன் வீதி, அன்னை வீதி, இந்திரா நகர், மகாத்மாகாந்தி வீதி ஆகிய பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.34 கோடி செலவில் தார் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு மாவட்ட கலெக்டர் கூறினார்.

அப்போது தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணசங்கரி குமரவேல், குத்தாலம் ஒன்றியக்குழு தலைவர் மகேந்திரன், பேரூராட்சி துணைத்தலைவர் பொன் ராஜேந்திரன், பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி.கமலக்கண்ணன், தரங்கம்பாடி தாசில்தார் காந்திமதி, திமுக ஒன்றிய செயலாளர்கள் அமுர்த விஜயகுமார், எம். அப்துல்மாலிக் தரங்கை பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா மற்றும் பேரூராட்சி வார்டு கவுன்சிலர்கள், அரசு அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# புதுக்கோட்டையில் தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு சார்பில் மாவட்ட ஆலோசனைக் கூட்டம்

**புதுக்கோட்டை, ஏப்.11–**

புதுக்கோட்டை மாவட்டம் மேலராஜ விதி யாஸ்மின் காம்ளக்ஸில் உள்ள புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு சங்க அலுவலகத்தில் மாவட்ட தலைவர் அஸ்ரப் அன்சாரி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது, இதில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளிகள் மாவட்ட கல்வி அலுவலர் செயல்பாடுகள் ஆட்சேபனைக்குறியதாக உள்ளது, தனியார் பள்ளிகள் ஒப்புதல், புதுப்பித்தல் ஆணை வழங்குவதில் பழைய நடைமுறையை பின்பற்றாமல் தன்னிச்சையாக செயல்படுகிறார், மாவட்ட தனியார் பள்ளிகள் அலுவலகம் செயல்பட தனியார் பள்ளி நிர்வாகிகளை மிரட்டி வற்புறுத்தி தேவையானவற்றை பூர்த்தி செய்து கொள்கிறார், கோப்புகளை பரிசீலனை செய்யாமல் காலம் தாழ்த்தி தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் ஆணை வழங்குவது கண்டனத்துக்குறியது, மாவட்ட கல்வி அலுவலக வளாகத்தில் கூட்ட அரங்கம் இருந்தும் தனியார் பள்ளிகள் முதல்வர்கள் கூட்டத்தை தனக்கு வேண்டிய குறிபிட்ட தனியார் பள்ளியில் மட்டும் நடத்துவது கண்டனத்துக்குறியது, மாவட்ட கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் விக்டர் தனது அதிகார வரம்பை மீறி செயல்படுகிறார் அவரை உடனடியாக இடம் மாற்றம் செய்ய வேண்டும், மேற்கூரிய தீர்மானங்கள் குறித்து நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளோம், மேற்கூரிய கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகள் கலந்து கொண்டனர் இவ்வாறான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மலை தேனீ கொட்டியதில் 12 பேர் காயம் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட முதியவர் உயிரிழப்பு





**சீர்காழி, ஏப்.11–**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அடுத்த வழுதலைக்குடி கிராமத்தில் ராஜேந்திரன் என்பவரது வீட்டின் அருகே உள்ள புளிய மரத்தில் மலைத்தேனீ கூடு கட்டி இருந்துள்ளது. இதனை அறியாமல் ராஜேந்திரன் குடும்பத்தினர் புளியம்பழம் பறிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அப்பொழுது மலை தேனீக்கள் அவர்களை கொட்டி உள்ளது. சற்று நேரத்தில் கூட்டில் இருந்த மொத்த தேனீக்களும் கிராமத்தில் உள்ளே சாலையில் நடந்து சென்றவர்கள், வீட்டில் வாசலில் இருந்தவர்கள் என அனைவரையும் விரட்டி விரட்டி தாக்கியுள்ளது.

இதில் 12 பேர் காயம் அடைந்து சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். 8 பேர் வீடு திரும்பிய நிலையில் படுகாயம் அடைந்த ராஜேந்திரன், பஞ்சவர்ணம் கார்த்தி, ரெங்கநாதன் உள்ளிட்ட நால்வரும் மேல் சிகிச்சைக்காக சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி முதியவர் ரங்கநாதன் உயிரிழந்தார். மற்ற மூவரும் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# அரியலூர் மாவட்ட விவசாயிகள் வேளாண் அடுக்கு திட்டத்தின் கீழ் பதிவு செய்ய மாவட்ட கலெக்டர் தகவல்



**அரியலூர், ஏப்.11–**

அரியலூர் மாவட்ட விவசாயிகள், பல்வேறு துறை சார்ந்த தேவைகளை ஒரே இடத்தில் பெற வசதியாக, தங்களது நில விவரங்களை, வருவாய் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களிடம், வேளாண் அடுக்கு திட்டத்தில் பதிவேற்றம் செய்து பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது பற்றி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது, வேளாண் அடுக்கு என்ற திட்டம், நடப்பு ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் பதிவு செய்யும் விவசாயிகள், வேளாண்மை-உழவர் நலத்துறை மற்றும் தொடர்புடைய 13 துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் நலத் திட்டங்களை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக விவசாயிகளின் அடிப்படை புள்ளி விவரங்களை சேகரிக்கும் பணியில் வருவாய் மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, அரியலூர் மாவட்ட விவசாயிகள் அனைவரும் தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி அவர்களிடம் தங்களது ஆதார் எண், வங்கிக் கணக்கு எண், புகைப்படம் மற்றும் நிலவுடைமை விவரங்களை இது தொடர்பான புதிய செயலியில் பதிவேற்றம் செய்வதன் மூலம், இனிவரும் காலங்களில் விவசாயிகள் தங்களது அனைத்து தேவைகளையும், ஒரே இடத்தில் பெற்று பயனடையலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

# நான் ஆளுங்கட்சி காரன், வாடகை கொடுக்க முடியாது - கடையின் உரிமையாளருக்கு கொலை மிரட்டல் விட்ட ஆலங்குளம் திமுக நகரச் செயலாளர்



**தென்காசி, ஏப்.11–**

நான் ஆளுங்கட்சி காரன், வாடகை கொடுக்க முடியாது எனக்கூறி கடையின் உரிமையாளருக்கு கொலை மிரட்டல் விட்ட ஆலங்குளம் திமுக நகரச் செயலாளரிடமிருந்து கடையை மீட்டு தரக்கோரி கடையின் உரிமையாளர் தென்காசி மாவட்ட கலெக்டரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

தென்காசி மாவட்ட கலெக்டர் துரை ரவிச்சந்திரனிடம் ஆலங்குளம் பாரதியார் தெருவில் வசித்து வரும் சாந்தி என்பவர் அருந்ததியர் தெரு ஆலங்குளம் எஸ்.பி.டி. நெல்சன் என்பவர் மீது புகார் மனு ஒன்றை அளித்தார்.

அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது, ஆலங்குளம் காவல் நிலையத்தின் எதிரே சாந்திக்கு சொந்தமான கடை ஒன்று உள்ளதாகவும், அக்கடையினை நெல்சன் என்ற வக்கீலுக்கு அலுவலகமாக பயன்படுத்த வாடகைக்கு விடப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்நிலையில் அவர் வாடகை பணம் தர மறுத்து ஏமாற்றி வருகிறார். மேலும் வாடகை பணம் கேட்க சென்றால் கொலை மிரட்டலும் செய்து வருகிறார். நெல்சன் என்பவர் ஆலங்குளம் திமுக நகரச் செயலாளர் என்பதால், நான் ஆளுங்கட்சி காரன், வாடகை கொடுக்க முடியாது என்று கூறி அடியாள்களை வைத்து கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி வருவதாக தெரிவித்துள்ளார்.

இச்சூழ்நிலையில் எனக்கும் எனது குடும்பத்தார்களுக்கும் பாதுகாப்பு தர வேண்டியும் நெல்சனிடம் இருந்து கடையை மீட்டு தரக்கோரியும் நேற்று தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சாந்தி புகார் மனு அளித்துள்ளார்.

# ஆவுடையார்கோவிலில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வடக்கு தெற்கு ஒன்றியத்தின் சிறப்பு ஆலோசனைக் கூட்டம்



**ஆவுடையார்கோவில், ஏப்.11–**

ஆவுடையார்கோவிலில் விடுதலைசிறுத்தைகள்கட்சியின் வடக்கு தெற்கு ஒன்றியத்தின் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொருளாளர் இரா. தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார். நிகழ்வில் சோணமுத்து, காத்தமுத்து, விஜயகுமார், சங்கர் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மேலும் ஆவுடையார் கோவில் ஒன்றிய ஒருங்கிணைப்பு குழு பா.சசி, மாவட்ட செயலாளர் கலைவேந்தன், மாநில துணை செயலாளர் தெ.கலை முரசு சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இதில் மீனவர் பேரராயம் மாவட்ட அமைப்பாளர் பீட்டர் வளவன், அறந்தாங்கி நகரச் செயலாளர் மரிய அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து, புரட்சியாளர் அம்பேத்கரின் 133 வது பிறந்தநாளான ஏப்ரல் 14ல் காலை 10 மணிக்கு மாவட்ட தலைநகர் புதுக்கோட்டையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து சமத்துவ உறுதிமொழி எடுத்துக்கொண்டு, தலைவர் அறிவித்த ஜனநாயகம் காப்போம் சிறுத்தைகள் அணிவகுப்பு பேரணியில் கலந்து கொள்வது, பேரணியில் சுமார் 100 நபர்கள் கலந்து கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



▶ சென்னை மெரினா கடற்கரை, உழைப்பாளர் சிலை அருகில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சென்னை பெருநகரின் மூன்றாம் பெருந்திட்ட தொலைநோக்கு ஆவண கையேட்டினை பொதுமக்களுக்கு வழங்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஒளிவருடல் (QR Code) வாயிலாகவும் மற்றும் இணைய வழி வாயிலாகவும் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தலைமை திட்ட அமைப்பாளர் என்.ரவிக்குமார், முதுநிலை திட்ட அமைப்பாளர் காஞ்சனா மாலா, உதவி திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை காசிமேட்டில் ஆஸ்திரேலிய ஆந்தையை பிடித்த திருவொற்றியூர் தீயணைப்பு துறை வீரர்கள்



**சென்னை, ஏப்.11–**

காசிமேடு இந்திரா நகரில் உள்ள அங்கன்வாடியில் சிறு குழந்தைகள் படித்து வருகின்றனர்.

இந்நிலையில் அங்கன்வாடி கட்டிடத்தில் உள்ள அறை அருகில் படிக்கட்டு அருகே வித்தியாசமாக பறவை இருந்துள்ளது. இதைப் பார்த்து அங்கன்வாடியில் பணிபுரியும் ஊழியர்கள் தீயணைப்பு கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தனர். உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த திருவொற்றியூர் தீயணைப்பு அலுவலர்கள் முருகானந்தம் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் தொங்கிக்கொண்டிருந்த பறவையை வலை லாவகமாக பிடித்தனர். பின்னர் பறவையை சோதனை செய்ததில் அது ஆஸ்திரேலிய ஆந்தை என்பது தெரிந்தது. இதையடுத்து அந்த ஆஸ்திரேலிய ஆந்தையை வனத்துறையிடம் தீயணைப்புத் துறையினர் ஒப்படைத்தனர்.



புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள விஜய் பேலஸில் புதுகை வரலாறு நாளிதழின் 5ம் ஆண்டு கல்விக்கண்காட்சியின் 2ம் நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் போது எடுத்தப் புகைப்படங்கள்.









# கிராமப்பகுதிகள் நிறைந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் கல்விகண்காட்சியை தொடர்ந்து நடத்திவரும் புதுகை வரலாறு பணி மகத்தானது - பேராசிரியர் விஸ்வநாதன்

**புதுக்கோட்டை, ஏப்.11–**

ஆயிரக்கணக்கான கிராமப்பகுதிகளை உள்ளடக்கிய புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக பல்வேறு சோதனைகளை கடந்து கல்வி கண்காட்சிகளை நடத்தி சாதனை படைத்து வரும் புதுகை வரலாறு பணியானது மிகப்பெரிய மகத்தான பணி என பேராசிரியர் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை விஜய் பேலஸில் புதுகை வரலாறு நாளிதழ் சார்பில் கல்வி கண்காட்சி ஏப்ரல் 8, 9 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கில் மாணவர்கள் பங்கேற்று பயன்பெற்றனர். இக்கண்காட்சியில் கலந்து கொண்ட பெற்றோர்கள், சமூகஆர்வலர்கள் தங்களது கருத்துகளை தெரிவித்துள்ளனர்.











**சா.விஸ்வநாதன்**
**செயலர்**
**வாசகர் பேரவை**

புதுக்கோட்டை கிராமங்கள் நிறைந்த மாவட்டம். இங்கே படிக்கும் மாணவர்களுக்கு கல்வி தொடர்பான இது போன்ற நிகழ்வுகள் நடத்த வேண்டியது அவசியம். அதை ஒரு சேவையாக புதுகை வரலாறு செய்து வருகிறது.

பனிரெண்டாம் வகுப்பை முடித்தவுடன் அடுத்து என்ன படிப்பது? எங்கு படிப்பது? உயர்கல்வி நிறுவனங்கள் எங்கே உள்ளது? அதைத் தொடர்புகொள்வது எப்படி? இது போன்ற விபரங்களை மாணவர்கள் தெரிந்து கொள்ள வசதியாக இந்த கண்காட்சி அமைந்துள்ளது.

வழக்கமான பாடங்களைத்தவிர, புதிய பாடங்கள் பற்றிய விபரங்களையும், வேலைவாய்ப்பை வழங்கும் படிப்புகள் தொடர்பான விபரங்களையும் இந்தக்கண்காட்சியில் அறிய முடிகிறது.

கண்காட்சியில் பங்கேற்றிருக்கும் கல்லூரிகள் தங்கள் கல்லூரியைப் பற்றிய விபரங்களை மாணவர்களுக்கு அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிதாக விளக்குவது சிறப்பாக உள்ளது.

முதல்முறையாக விமானத்துறையில் பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் படிப்பதற்கு உரிய படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்கள் இக்கண்காட்சியில் பங்கேற்றுள்ளது என்பது ஒரு சிறப்பு.

வேலைவாய்ப்பு தொடர்பான கருத்தரங்குகளுக்கும் ஏற்பாடு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

என்னென்ன பாடங்களை எடுத்துப் படித்தால் எப்படிப்பட்ட வேலை கிடைக்கும் என்பதை புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் வேல்முருகன், தணிக்கைத் துறையில் பணியாற்றும் சீனிவாசன் ஆகியோர் மாணவர்களுக்கு சிறப்பாக எடுத்துக்கூறினார். பல ஆயிரக்கணக்கில் செலவு செய்து அறிய வேண்டிய தகவல்களை, செலவில்லாமல் ஓரிடத்தில் அனைத்தையும் அறியச்செய்தனர்.

**மு.சிவரஞ்சனி**
**தமிழ்த்துறைத்**
**உதவிப்பேராசிரியர்**
**புதுக்கோட்டை**

நார்த்தாமலை கோயிலில் நடக்கும் திருவிழா போல இருந்தது இக்கல்விகண்காட்சி, ஏனென்றால் தேரோட்டத்தில் நடக்கும் கலைசார்ந்த நிகழ்வுகளை இங்கே பார்க்க நேரிட்டது. நடனம், பாடல்கள், மதுபோதை விழிப்புணர்வு பேச்சு எண்ணற்ற நிகழ்வுகள் என்மனதில் ஆழமாக பதிந்தது. மாணவர்கள் அதிகளவில் தனிப்பட்ட முறையில் வந்தனர். அது எனக்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்தது.

வறுமையின் காரணமாக வாழ்வில் நம்முடைய குழந்தைகளுக்கு செல்வத்தை சேர்த்து வைக்காவிட்டாலும், நாம் சொத்தாக கொடுப்பது உயர்கல்வி ஒன்றுதான். அப்படிப்பட்ட மேற்படிப்பை தேர்ந்தெடுக்கும்போது நாமும், அருகாமையில் இருந்தால் இன்னும் கூடுதலான மகிழ்ச்சியாக இருக்கும்.

மாணவர்களுக்கு நான் எப்போதும் சொல்லும் ஒரு அறிவுரை. தேர்வில் தோல்வி அடைந்தாலும், மதிப்பெண் குறைந்தாலும், விபரீத முடிவுகளை எடுக்க வேண்டாம். இனி இழப்பதற்கு வேறெதுவுமில்லை என்று தோன்றுவதாலோ. உங்கள் கனவுகளை நீங்கள் அடையவில்லை என்பதற்காகவோ உங்களையே நீங்கள் குறைவாக நினைக்காதீர்கள்.

தடைகளே இல்லாமல் வெற்றிகளை கண்டால்வாழ்வில்எந்தசுவாரசியங்களும் இருக்காது. வலிகளை காணவில்லை எனில் வாழ்க்கையில் கற்பதற்கோ உன்னை நீ விருத்தி செய்வதற்கோ எந்தவழிகளும் இருக்காது.

கொஞ்சம் பொறுமையாக இருந்து எல்லாவற்றிற்குமான அர்த்தங்களை காலப்போக்கில் காணவேண்டும். எல்லா அனுபவங்களும் நம்மை நமக்கான இடத்திற்கு கூட்டிச்செல்லும். எல்லா இழப்புகளும், எல்லா மனமுறிவுகளும், எல்லா துரோகங்களும், எல்லாத் தவறுகளும் உனக்கான பாடங்கள் என வாழ்க்கையை பார்க்கும் கோணத்தை மாற்றிக்கொள்ளுங்கள்.

தவறிவிழுவதை தரக்குறைவாக பார்க்க வேண்டாம். எங்காவது தொலைந்துபோக அஞ்சவும் வேண்டாம். தொலைந்து போகும் உங்களை மீண்டும் மீண்டும் கண்டுபிடியுங்கள். உங்கள் பயணத்தின்மீது நம்பிக்கை வையுங்கள். வாழ்வைத் துவங்கலாம். எதுவும் சாத்தியமே. எவ்வளவுதான் காயப்பட்டாலும், யார்தான் காயப்படுத்தினாலும் உங்கள் மனதை ஒருபோதும் கல்லாக்கிக் கொள்ளாதீர்கள். ஈரமுள்ள நெஞ்சங்கள் ஒருபோதும் தோற்பதில்லை. அவர்களுக்கும் ஒருகாலம் வரும். நிச்சயம்வரும்.

**பழனிவேல்**
**பெரியநாயகிபுரம்**

என்னுடைய பேத்தி அறிவுமதி. 12ம் வகுப்பு முடித்து, கல்லூரிக்கு செல்லும் தயார் நிலையில் உள்ளார். குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஐந்துக்கும், மேற்பட்ட நாளிதழ்களை பார்க்கிறேன். ஆனால் நம்முடைய மாவட்டத்தில் இருந்து, தமிழகம் முழுவதும் பரவி இருக்கும் புதுகை வரலாறு நாளிதழுக்கு நான் எப்போதும் முன்னுரிமை கொடுத்துபடிப்பேன்.

காரணம் என்னவென்றால், நம்மாவட்டத்தின் கோரிக்கைகள், கலாசார நிகழ்வுகள்ஆகியவற்றை நேரடியாகப்போய்பார்க்க முடியவில்லை என்றாலும், இந்த நாளிதழ் வாயிலாக தெரிந்து கொள்கிறேன், அறிந்து கொள்கிறேன். கடந்த ஐந்தாண்டுகளாக நடைபெறும் கல்வி கண்காட்சியை தொடர்ந்து பார்வையிட்டு வருகிறேன்.

ஆனாலும் மற்ற ஆண்டுகளைவிட, இந்த ஆண்டு வெளிமாவட்டங்கள் சார்ந்த அதிகமான கல்லூரி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

**சி.அழகப்பன்**
**ஆண்டிப்பட்டி**
**அரிமளம் ஒன்றியம்**

அடிக்கும் கோடை வெயிலில், இப்படிப்பட்ட ஒரு குளிர்சாதன அரங்குக்குள் மூன்று மணி நேரம் பார்வையிடுவதே ஒரு மகிழ்ச்சியை உண்டாக்கியது. என் பையனுக்கு நான் என்ன துறையை தேர்ந்தெடுத்தாலும், விடுதியில் தங்கி படிப்பது என்றாலும், அந்த முடிவுக்கு என் பையன் தலைசாய்த்து விடுவான்.

அதனால் தரமான கல்வியையும், ஒழுக்கத்தையும் தேர்ந்தெடுத்து கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன். அமைக்கப்பட்டுள்ள அனைத்து அரங்குங்களிலும், வித்தியாசமான பாடப்பிரிவுகள் இருந்தது. இனி வருங்காலங்களில், இது சார்ந்த கல்வி கண்காட்சிக்கு நம் மாவட்டத்தைதாண்டி, வெளி மாவட்ட பெற்றோர்களும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதே என்னுடைய சிறிய விருப்பமாக உள்ளது.

**ஆ.மணிகணடன்**
**நிறுவனர்**
**தொல்லியல் ஆய்வு கழகம்**
**புதுக்கோட்டை**

பொறியியல் தொழில்நுட்பம், கலைஅறிவியல், நிர்வாகமேலாண்மை, மருத்துவம், பேரிடர்மேலாண்மை, தொழிற்பயிற்சி நிறுவனங்களின் பட்டப்படிப்புகள், பல்தொழில்நுட்ப நிறுவனங்களின் பட்டயப்படிப்பு பற்றிய உள்ளிட்ட விவரங்களை எளிதில் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் இந்த தனியார் கல்லூரிகள் மட்டுமின்றி அரசு கல்லூரிகளில் சேர்வதற்கு எழுதவேண்டிய போட்டி தேர்வுகள் அதற்கான பயிற்சிகள் உள்ளிட்டவை குறித்த விவரங்களும் இதிலே காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. கிராமப்புற ஏழை மாணவர்கள் பல்வேறு கல்லூரிகளுக்கு சென்று சேகரிக்க வேண்டிய தகவல்களையும், சேரவேண்டிய படிப்பு , பாடம் உள்ளிட்ட விவரங்களையும் தனித்தனியாக சேகரிப்பதைவிடவும் ஒரே இடத்தில் இலவசமாக மாணவர்கள் பெரும் வகையில் இருந்தது.

► சிறப்புதொகுப்பு
பொ.ஜெயச்சந்திரன்
திருவரங்குளம்

**PUDUGAI VARALARU - National Tamil Daily :** Published by **S.Sivasakthivel** at Plot No.1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai-622003, TamilNadu State and Printed at **V.C Printograph,** 144, M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. **Editor: S.Sivasakthivel,** Phone : 04322-261577, E.Mail: pudugauvaralaru@gmail.com